★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 சித்திரை 8 றஜப் 17 இதழ் 65

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 20—4-84

## இந்திரா எம்.ஜி.ஆர். சந்திப்பு

### இலங்கைத் தமிழர் பற்றி ஆராய்ந்தனர்

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துத் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை நேற்றுச் சந்தித்து விரிவாகப் பேச்சுக்கள் நடத்தினார்.

இச்சந்திப்பு புதுடில்லியில் நடந்தது. சுமார் ஒரு மணி நேரம் வரை இரண்டு தலைவர்களும் இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக ஆராய்ந்தனர்.

இச்சந்திப்பின் பின்னர் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கியிருக்கும் பல்வேறு நெருக்கடிகளையும் தாம் விரிவாக

(8ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### அடுத்த மாதம் 7ம் திகதி மீண்டும் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் விரிவுரைகளுக்காக அடுத்தமாதம் 7ம் திகதியே மீண்டும் திறக்கப்படும் என்று துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அறிவித்துள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

# தென்இந்தியாவில் இயங்கும் முகாம்களில் இலங்கை - இந்தியா கூட்டாக சோதனையிட வேண்டும்



## பாராளுமன்றத்தில் 'லலித்' யோசனை

(கொழும்பு)

**தென் இந்தியாவில் இயங்கும் பயங்கரவாதிகளின் முகாம்களில் இலங்கையும், இந்தியாவும் கூட்டாக சோதனை மேற்கொள்ள வேண்டும். இதற்கு இலங்கை தயார். இந்தியாவுடன் ஓர் நட்புறவு ஒப்பந்தம் செய்து கொள்ளவும் இலங்கை தயாராக உள்ளது''**

**இவ்வாறு தமது இந்திய விஜயம் குறித்து தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி பாராளுமன்றத்தில் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

இலங்கைத் தமிழர்கள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களை பற்றி அமைச்சர் லலித் அத்துலத்முதலி நீண்டதொரு அறிக்கையைச் சபையில் சமர்ப்பித்தார். அமைச்சர் லலித் தமது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

''இந்தியாவின் சகல தலைவர்களும், மக்களும், ஏன் வீதியில் சென்றுகொண்டிருக்கும் ஓர் சாதாரண இந்தியக்குடிமகனும்கூட இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கோ அல்லது இறைமைக்கோ குந்தகம் விளைவிக்கப்படுவதைக் கடுகளவும் விரும்பவில்லை.

''இந்திய மக்கள் அனைவருமே இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு மதிப்பளித்து வருகின்றனர். பயங்கரவாதிகளே இதனைச் சீர்குலைக்கின்றனர்.

இந்தியாவில் ஓர் தளம் நிலையம் அமைந்து, இங்கு நடக்கும் சம்பவங்களைப் பத்தாகப் பெரிதுபடுத்தி உலகம் முழுக்கப்பரப்பி வருகின்றார்கள். கடலுக்கு அப்பாலிருந்து இவர்கள்மூலம் விடுக்கப்படும் அறி

[8ம் பக்கம் பார்க்க]

யாழ்ப்பாணத்தில்

### ஊரடங்குச்சட்டநேரத்தில் குண்டுவெடிப்புச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதியில் நேற்றுமுன்தின மிரவு ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்த நேரத்தில் குண்டு ஒன்று வெடித்தது.

இக்குண்டு வெடிப்பினால், அப்பகுதியிலுள்ள பிரபல வர்த்தக நிலையக்கதவின்கீழ் பகுதி சேதமடைந்துள்ளது. கதவில் குண்டு வீச்சு அடையாளம் மட்டும் காணப்படுகிறதே தவிரக் கடைக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இக்குண்டு வெடிப்புச் சத்தம் ஒரு மைல் தூரத்திற்கப்பாலும் கேட்டதாகக் கூறப்படு

(8ம் பக்கம் பார்க்க)

## இலங்கை ஜனாதிபதியை இந்திரா சந்திக்க வேண்டும்!

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஒரு சுமுகமான முடிவு ஏற்பட இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனாவை சந்தித்து பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்று தமிழ்நாட்டின் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் யோசனை தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக விரிவாக ஆராய்ந்து தீர்மானங்களை மேற்கொள்ளும் பொருட்டு தமிழக

### தமிழக அரசியல் கட்சிகள் யோசனை

முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் சென்னையில் கூட்டிய ஓர் சர்வகட்சி மாநாட்டிலேயே தமிழ் நாட்டின் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் மேற்படி யோசனையை ஒரு மனதாக வலியுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவம் வாபஸ்பெறப்பட வேண்டும் என்றும், பலாலியில் இலங்கை-இந்திய விமான சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு ஏற்பட மத்திய அரசு

[8ம் பக்கம் பார்க்க]

### 'ராய்ட்ட'ருக்குத் தகவல்: 50 பேர் பலி; தீவிரவாதிகள் எவருமில்லை''

- யாழ். அரச அதிபர் நேசையா

### ''234 பேர் கொல்லப்பட்டனர்''

- பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம்

(ராய்ட்டர் நிருபர்)

யாழ்ப்பாணத்தில் 50 பேர் கடந்தவாரம் இராணுவத்தினரால் சுட்டுக்கொலைப்பட்டனர். இவர்களில் எவரும் தீவிரவாதிகளல்ல'' என்று யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா சர்வதேசசெய்தி நிறுவனமான 'ராய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்துள்ளார் இந்நிறுவனத்துக்கு யாழ். பிரஜைகள் குழு சார்பில்கடந்தவாரம் 234பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாக அதன் தலைவர் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் கூறியுள்ளார்.

'ராய்ட்டர் சார்பில் அதன் நிருபர் திரு. ஜே. புளோட் டன் இப் பிரமுகர்களைச் சந்தித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வேறொரு அதிகாரி 'ராய்ட்டருக்கு வழங்கியுள்ள பேட்டியில் தாம் யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவத் துருப்புகள் மீது அனுதாபப்படுவதாகவும் இவர்களில் பெரும்பாலானவர்கள் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களென்று கூறியுள்ளார். மேலும் அவர் யாழ்ப்பாணத்திலுள்ள படையினர்

(8-ம் பக்கம் பார்க்க)

'ராய்ட்டர்' செய்தி ஸ்தாபன

### தகவல்களில் முரண்பாடு: ஆராயும்படி பணிப்பு!

(கொழும்பு)

''ராய்ட்டர்'' செய்தி நிறுவனத்துக்கு கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்தவர்கள் சம்பந்தமாக அங்குள்ள அரசாங்க அதிகாரிகள் வழங்கியுள்ள தகவல்களிலிருந்த ஆராயும்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு.

[8-ம் பக்கம் பார்க்க]

### உடுப்பிட்டியில் நேற்று ஆயுதப்படையினர் சோதனை

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி பகுதியில், நேற்றுக்காலை விடுவில், விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் சுற்றி வளைத்துச் சோதனையிட்டனர்.

நேற்று அதிகாலை 4மணிக்கு ஆரம்பமான இச்சோதனை நண்பகல்வரை நீடித்தது.

ஒலிபெருக்கி மூலம் எவரையும் வெளியில் செல்லவேண்டாம் என்று அறிவித்த பின்னரே இச்சோதனை நடந்ததாக கூறப்படுகிறது. இருதினங்களுக்கு முன்னர் பருத்தித்துறை, நெல்லியடி, அல்வாய், கரவெட்டிப் பகுதிகளிலும், இதே போன்ற சோதனை நடைபெற்றது.

இராணுவத்தினர் அக்கிராமத்தை முற்றுகையிட்டு, சுற்றிவளைத்து வீதியிலும், சந்திகளிலும், திருக, பொலிஸ்

(8ம் பக்கம் பார்க்க)

### பயங்கரவாதத்தை ஒழிக்க நீண்டகாலத் திட்டம்

நுவரெலியாவில் ஜனாதிபதி தகவல்

(நுவரெலியா)

''வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் பயங்கரவாதமே இப்பொழுது நாட்டின் மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது நீண்டகால அடிப்படைத்திட்டம் மூலம், பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டுவரப்படும்'' என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கருத்துவெளி

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சாவகச்சேரி கண்டி வீதி 304 மீ கட்டைக்கு முன்பாக கற்றுமதில்கள் அடங்கினதும் மின்சார வசதியுடனும் நல்ல தண்ணீர் கிணற்றுடனும் 5 பரப்புக்காணியுடன் சகல வசதியுள்ள கல் வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 2, கல்லடி லேன் M. P லேன்) சாவகச்சேரி அல்லது K. B. சுந்தரம் 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1895

நல்ல இனம் பசு மாடுகள் கன்றுடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: K. வாசுதேவன் 21, யாழ் வீதி, யாழ்ப்பாணம், [1908]

தனிப்பட்ட பாவிப்பிலுள்ள 60 வாட்ஸ்) அம்பிளிபயர் விற்பனைக்குண்டு, நா. கந்தையா, (மின்சார உத்தியோகஸ்தர்), மருதங்குளம், சாவகச்சேரி. 1911]

கொக்குவில் ராசமின் அருகாமையில் வீடு கட்டக்கூடிய $8\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு குலசிங்கம், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை [1913]

கைதடி வீடமைப்புத் திட்டத்தில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு தொடர்பு; 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். [1906]

கொடிகாமம் கச்சாய் வடக்கு றோட்டில் பிரதேசசபைக்குடன் கூடிய 10 பரப்புக் காணியும் கல் வீடு வளவும், $2\frac{1}{2}$ ஏக்கர் இளம் தென்னங்கன்றுடன் உள்ள காணியும் விற்பனைக்குண்டு. விடுமுறை நாட்களில் தொடர்பு கொள்ளவும் க. தயாபரன், "சகுந்தலா வாசா". கச்சாய்வடக்கு கொடிகாமம் [1909]

### விற்பனைக்கு

யாழ். கண்டி பிரதானவீதி கைதடிச் சந்தியில் "கிளா ஹாட்வெயர் ஸ்டோஸ்" எனும் ஸ்தாபனம் சாமான்கள், தளபாடங்களுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நேரடி விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். [907]

சிங்கர் குளிர்சாதனப்பெட்டி R/60, நாஷனல் பனசோனிக் கலர் T. V. 22" (அன்ரனாவுடன்) சன்யோ 2 வேனர் குக்கர் (சிறிலுடன்) Hermes portable ரைப்ரைட்டர், மெத்தைகள் முதலியன உடனடியாக விற்பனைக்குண்டு எல்லாம் புதியவை. 14, செல்பீற்றேர்ஸ் லேன். (முதல் மேல்மாடி வீடு) [1902]

### தேவை

எஞ்சின் இல்லாத பேர்ஜோ Peugeot) Auto சைக்கிள் தேவை. விலை குறிப்பிடவும். எம். நாயகம், இல்லாலை, பண்டத்தரிப்பு. [1912]

தையல் மெஷின்கள் தேவை. விலையும் மற்றும் விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 1900 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 1900

### காணவில்லை

11-4-84 புதன் ஸ்ரீதர் தியேட்டருக்கு அருகாமையில் 002 A B 0965 கறுப்பு ஏசியா சைக்கிள் தவறவிடப்பட்டது ஒப்படைப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். செ. சிவசுப்பிரமணியம், 78, கஸ்தூரியார் வீதி, வண். மேற்கு, யாழ்ப்பாணம். [1914]

● யாழ். ஸ்டான்லி வீதி

# இலங்கைவங்கிக் கிளையில் கொள்ளைபோனது 13 லட்சம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி இலங்கைவங்கி கிளையில் 13 லட்சத்து 25 ஆயிரம் ரூபா துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் இம்மாதம் 10-ம் தேதி காலை நடந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்று காலை யந்திரத் துப்பாக்கிகளுடன் வந்த சுமார் 60 இளைஞர்கள் வங்கியை நான்கு பக்கத்தாலும் முற்றுகையிட்டு காலை 7.40 மணிக்கு முன்கதவு திறக்கப்பட்ட போது, காவலாளியை மடக்கி உள்ளே சென்றதாக பொலிஸில் தெரிவிக்கப்பட்டபுகாரில் கூறப்பட்டுள்ளது.

உள்ளே சென்ற சுமார் 15 இளைஞர்கள், உள்ளேவரும் வங்கி ஊழியர்களை, துப்பாக்கி முனையில் பணயம் வைத்துக் கொண்டிருந்ததாகவும், வங்கி உதவிமனேஜர் வந்ததும், இரும்புப்பெட்டி திறப்பை துப்பாக்கியால் பலமுறுத்தி பெற்றுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இத்திறப்பை பெறுவதற்கு சுமார் இரண்டரைமணிநேரம் வங்கிக்குள்ளே முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்படுகிறது

இதேசமயம், துப்பாக்கி முனையில், பயமுறுத்தி காவலாளியை முன்வாசலில் நிற்கச் செய்து, வங்கிவரும் வாடிக்கையாளர்களுக்கு இன்று வங்கி வேலைகள் நடைபெறாதென்று தெரிவிக்குமாறு பணித்தனராம்.

சுமார் 10 மணியளவில் வங்கி இரும்புபெட்டியைத் திறந்து பணத்தை எடுத்துக்கொண்டு, வங்கிமுகாமையாளரின் காரில் அவர்கள் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இக்கார் பின்னர் கரும்பராய் கற்பகபிள்ளையார் கோவிலில் அநாதரவாக விடப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (மா-க)

VOCATIONAL TRAINING INSTITUTE
CHUNDIKULI GIRLS' COLLEGE,
JAFFNA.

Vacancy for a Home Economics Diploma Teacher.

Apply before 30th April 1984.

PRINCIPAL.
1915

## முக்கிய அறிவித்தல்

### மின் விநியோகம்

1984ம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் பிற்பகல் 4-00 மணிவரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு அனுராதபுரம் - யாழ்ப்பாணம் 132 கே. வி. மின் மார்க்கம் தடைசெய்யவிருப்பதால், கிளிநொச்சி பரந்தன், மாங்குளம், துணுக்காய், முல்லைத்தீவு, கன்னாகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணை போன்ற இடங்கள் அடங்கிய

கிளிநொச்சி, யாழ். பிரதேசங்களில் பெரும்பாலான பகுதிகள் மின்சார விநியோகம் தடைப்படும் என அறியத்தருகின்றேன்.

மின் பொறியியலாளர்
யாழ். பிரதேச அலுவலகம்
இலங்கை மின்சார சபை'
கன்னாகம்.
(1905)

"யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பில்லாத நிலையில்

# மேதினத்தை கொண்டாடுவது பொருத்தமற்றதாகும்

[யாழ்ப்பாணம்]

"யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பில்லாத நிலை நீடிக்கும் இந்நேரத்தில் தொழிலாளர் உரிமைத்தினமான மேதினத்தைக் கொண்டாடுவது எவ்வகையிலும் பொருத்தமற்றது"

இவ்வாறு தமிழ் தொழிற்சங்க கூட்டணித் தலைவரும் முன்னாள் கோப்பாய் எம். பியுமான திரு. சி. மு. ஆலாலசுந்தரம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது!

ஊர்வலத்துக்கு அனுமதி இல்லை. வீட்டில் இருப்பவர்களுக்கும் நிம்மதி இல்லை. இந்நிலையில் தமிழ்பேசும் தொழிலாளர் மேதினம் கொண்டாட முடியாது.

"ஆகவே தமிழ் தொழிற்சங்க கூட்டணித் தலைவர் மேதின ஏற்பாடுகளையும் அது தொடர்பான முடிவுகளையும் ரத்துச் செய்து அந்தந்த பிரதேசங்களில் தொழிற்சங்க கூட்டணியினர் ஆலயங்களில் மே முதலாம் திகதி உண்ணாவிரதம் இருக்கும்படி வேண்டுகோள் விடுக்கின்றேன். [மா]


உ



## திருமண விஞ்ஞாபனம்

இரத்தாக்ஷி ஹூ சித்திரைத்திங்கள் 9-ம் நாள் (21-4-84) சனிக்கிழமை பி. ப. 4-30 மணியிலிருந்து 6 மணிவரையில் உள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது

| மகன்: | மகள்: |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| நிர்மலராஜன் | கீதாஞ்சலி |
| (Chartered Civil Engineer) | |

அவர்களுக்கும்

இறையருளால் சைவமுறைப்படி இலண்டன் "லோலா ஜோன்ஸ்" மண்டபத்தில் திருமணம் நடைபெறும். உற்றாரும், உறவினரும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொண்டு மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

| | |
|---|---|
| A. W. தங்கராஜா | C. K. கந்தசுவாமி |
| (இளைப்பாறிய மாவட்ட உத்தியோகத்தர் இ. மு. இலாகா) | (இளைப்பாறிய அதிபர் கொக்குவில் இந்துக்கல்லூரி) |
| தங்கரத்தினம் தங்கராஜா | மகாதேவி கந்தசுவாமி |
| (இளைப்பாறிய அதிபர், நவாலி மகாவித்தியாலயம்) | |
| The Bungalow, St. Helen's Hospital, Ipswich IP 3 8LZ, England. | 26, Langdon Shaw, Sidcup, Kent DA 14 6 Au, England. |

(1891)

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

## குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைக்ளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு "மேற்கு ஜெர்மனி 'BASF'" தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 16/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2 ஞானார்த்தப்பிரதீபமாவத்தை, த. பெ. இல. 9
(முன்னாள் யருதுலைறோட்) கொழும்பு 8.
தொலை பேசி: 5979659

Metropolitan

# இந்திய அரசு தமிழ் தீவிரவாதிகள் மீது கடுமையாக நடக்கும்?

## 'லண்டன்டைம்ஸ்' நிருபர் வெளியிடும் தகவல்

லண்டன், ஏப். 19

"தென்னிந்தியாவில் உள்ள இலங்கைத் தீவிரவாதிகளுக்குத் தமிழக மாநில அரசு ஆதரவு வழங்கிவருகிறது இது குறித்து இந்திய மத்திய அரசு எதுவும்செய்ய முடியாதுள்ளது. ஏனெனில் இந்திய பாராளுமன்றத் தேர்தல்கள் இன்னும் எட்டு மாதங்களில் நடைபெறவுள்ளன. இத்தேர்தல்களில் தமிழகத்தின் ஆதரவை மத்திய அரசு பெற வேண்டியுள்ளது. ஆனால் தேர்தலின் பின்னர் மத்திய அரசின் போக்கு மாறவும்கூடும். இலங்கைத் தீவிரவாதிகள் விடயத்தில் அது பாதகமான முடிவுகளையும் எடுக்கலாம்'' என்று 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் அதன தமிழ் நாடு நிருபர் மைக்கேல் ஹம்லின் எழுதியுள்ளார்.

நிருபர் மைக்கேல் ஹம்லின் இலங்கைத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்து அவர்களில் ஒருவரான சபிசி என்பவரையும் பேட்டிகண்டு தமது பத்திரிகையில் எழுதியுள்ளார். அப்பேட்டியில் இலங்கைத் தீவிரவாதிகளுக்குத் தமிழக அரசின் ஒத்துழைப்புக் குறித்து சபிசி குறிப்பிட்டுள்ளார். தமிழகத்திலிருந்து பல ஆயுதங்கள் இலங்கைக்குக் கடத்திச் செல்லப்பட்டு அங்கு அவை பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார் என்றும் 'லண்டன் டைம்ஸ்' கூறுகிறது.

தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் புகலிடம் பெற்றுள்ளனரென்றும், தமிழக அரசு இவர்களுக்கு அங்குள்ள அரச விடுதிகளில் தங்கி அவர்களின் அலுவல்களைக் கவனிக்க ஏற்பாடுகள் செய்து கொடுத்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிருபர் மைக்கேல் ஹம்லினின் கருத்துப்படி தமிழக அரசின் ஆதரவைப் பெறவே இந்திய மத்திய அரசு இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகள் விடயத்தில் கடுமையாக இல்லையென்றும், எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் இந்திய மத்திய அரசு தமிழ்த் தீவிரவாதிகளைக் கடுமையாக நடத்தக்கூடுமென்றும் அறியப்படுகின்றது. (ஐ)

## சேர்நெனன்கோவுக்கு றீகன் பாராட்டு!

வாஷிங்டன், ஏப். 19

சோவியத் அதிபராக திரு. கொன்ஸ்டன்டின் சேர்நெனன்கோ தெரிவுசெய்யப்பட்டிருப்பது குறித்து அமெரிக்க அதிபர் திரு. றொனல்ட் றீகன் அவருக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

அச்செய்தியில் திரு சேர்நெனன்கோவை றீகன் வாழ்த்தியிருப்பதுடன், "மனித குலத்தின் பொதுநலன்களுக்கென அமெரிக்காவும் சோவியத்தும் தமக்கிடையேயுள்ள முரண்பாடுகளை நீக்கிச் செயல்படவேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

திரு. றீகன், உலக நெருக்கடிகளைத் தீர்த்துவைப்பதில் சோவியத் யூனியனுக்கே பெரும் பொறுப்பிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் நடைபெற்ற அரைகுறையாகவும் தோல்வியிலும் முடிவடைந்த அணு ஆயுதக் குறைப்பு, மற்றும் படைக் குறைப்பு மாநாடுகளைத் தாம் மீண்டும் ஆரம்பிக்கத் தயாராகவிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (கி)

## சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

மன்னார்)

மன்னார் கட்டுக்கரை குளத்தில் சிறிய மீன்வகைகளைப் பிடிப்போரைக் கண்டுபிடித்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு வசதியாக கட்டுக்கரைகுள கண்காணிப்பு குழு ஒன்று நியமிக்கப்படும்.

இவ்வாறு பறப்பாங்கண்டல் நன்னீர் மீன்பிடிச்சங்கத்தின் காலாண்டுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நன்னீர் மீன்பிடி பரிசோதகர் ஜி. மரியதாசும் கலந்துகொண்டார்.

## 'காலிஸ்தான்' தனிஇராச்சியம் ஒருபோதும் வழங்கப்படமாட்டாது!

### பாராளுமன்றத்தில் சேத்தி அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 19

"இந்தியாவின் வடமேற்கு மாநிலமான பஞ்சாப்பில் சீக்கியர்களுக்கு 'காலிஸ்தான்' தனி இராச்சியம் ஒருபோதும் வழங்கப்படமாட்டாது'' என்று இந்திய உள்துறை அமைச்சர் திரு பி. ஸி. சேத்தி நேற்று உறுதியாகப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அண்மைக் காலங்களில் பஞ்சாப்பின் முக்கிய நகரங்களான சண்டிகார் அமிர்தஸரஸ் ஆகியவற்றில் தீவிரவாதிகளின் வன்முறைகள் அதிகரித்துள்ளன கடந்த வாரம் பலர் வீதிகளிலும் ஏனைய இடங்களிலும் சுட்டுக் கொல்லப்பட்டனர் இவ் கேந்திர இடங்களில் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் இரு தரப்பு உறுப்பினர்களும் பஞ்சாப் தீவிரவாதத்தைக் கண்டித்துள்ளனர்.

அமைச்சர் சேத்தி மேலும், சீக்கிய ஆலயங்கள் சில பஞ்சாப் தீவிரவாதிகளின் புகலிடங்களாக இருப்பது குறித்துக் கவலை வெளியிட்டார். இந்த ஆலயங்களில் இடம்பெறும் சட்ட விரோத நடவடிக்கைகள் குறித்தும் பொதுமக்கள் அறிவிக்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அமிர்தஸரஸ் பொற்கோயிலில் தீவிரவாதிகள் ஆயுதப் பயிற்சி பெறுகின்றனரெனவும், அவர்களுக்குப் பணம், மற்றும் பணிப்புரைகள் வழங்கப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## பாக். விமானங்களில் பஞ்சாப்பினுள் ஆயுதம்!

புதுடில்லி, ஏப் 19

பஞ்சாப் மாநிலத்தின் ஒதுக்குப்புறம் ஒன்றில் பாவிக்கப்படாத விமானத்தளமொன்றில் இரு பாகிஸ்தான் விமானங்கள் வந்திறங்கின என்றும் இவற்றின் விமானிகள் இந்திய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு விமானங்களும் உபயோகித்த அத்தளம் பஞ்சாப்-பாகிஸ்தான் எல்லையருகே காணப்படுவதாகும்.

இந்திய பாதுகாப்புச் சேவை

(7-ம் பக்கம் பார்க்க)

## 'கடல் அரிப்பிலிருந்து மன்னாரைக் காக்கவேண்டும்''

(மன்னார்)

மன்னார் பகுதி கடலோரங்களில் அனுமதியின்றி மணல் எடுத்துச் செல்லப்படுவதால் நிலப்பரப்பை கடல் ஆக்கிரமித்துக் கொண்டு வருகிறது. இதனைத் தடுப்பதற்காக மன்னார் பகுதியில் கரைஓரப் பாதுகாப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு உலக சுற்றாடல் தினவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய மன்னார் அரசாங்க அதிபர் திரு ஜெகா செந்தில்நாதன் தெரிவித்தார்.

இவ்விழா மன்னார் அல்அஸ்ஹர் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது

மன்னார் உள்ளூராட்சி திணைக்களமும் கல்வித்திணைக்களமும் இணைந்து நடத்திய இவ்விழாவில் மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கே. பரமேஸ்வரன் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் ஜனாப் எம். எம். மக்பூல், மன்னார் விவசாயப் பணிப்பாளர் ஜனாப் எம். ஐ. எம். முஸ்தபா, கல்வி அதிகாரிகள் ஜனாப் கே. எம். வசீர் ஜனாப் இசற் ஏ றகீம் மன்னார் ஆய்வு உத்தியோகத்தர் திரு. ஜெனசீஸ் பேர்னாண்டோ ஆகியோர் உட்பட்டவர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் உரையாற்றிய மன்னார் அரசாங்க அதிபர் தமதுரையின்போது சுற்றுடலைச் சுத்தமாக வைத்திருப்பது பற்றி பெரியவர்களுக்கு சொல்வதிலும் பார்க்க மாணவர்களுக்கு விளக்குவதே சிறந்தது மாணவர்கள் பெரியவர்களுக்கு சுற்றாடல் சுத்தம் பற்றி எடுத்து கூறி தமது பகுதி சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பர்.

மன்னார்பகுதியில் பலர் இப்போதும் வாளி மலசல கூடங்களையே பாவித்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்நிலையை மாற்றி எல்லோரும் நீர்மலசல கூடங்களை பாவிக்க வேண்டும்.

இதேவேளை வெறும் நிலத்தில் மலம் கழிப்பதிலும் பார்க்க வாளிமலசல கூடங்களைப் பாவிப்பது சிறந்தது என்றார்.

## நோர்வே நிறுவன உதவியுடன் அகதி இளைஞருக்கு கைப்பணிப் பயிற்சி

சாவகச்சேரி)


கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் இளைஞர் - யுவதிகளுக்கான கைப்பணிப்பயிற்சித் திட்டம், நோர்வே மக்கள் நிவாரண சங்கத்தின் அனுசரணையுடன் அறவழிப் போராட்டக்குழு ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் அடிப்படையில் பப்படம், பற்பொடி தயாரித்தல் தையல் வேலை, கைப்பணிப் பொருட்கள் தயாரித்தல், பனம்பொருள் பயிற்சி, தச்சுவேலை, ஆகிய திட்டங்கள் நடைபெறுகின்றன.

இப்பயிற்சித் திட்டங்களுக்கான உபகரணங்களையும் மூலப் பொருட்களையும், நோர்வே மக்கள் நிவாரண சங்கம், அறவழிப் போராட்டக் குழுவிடம் கையளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


PHILIPS

பிலிப்ஸ் நிகரற்ற ஒளி.



பளிச்சிடும் வெளிச்சத்திற்கும் நீடித்த உழைப்புக்கும் தரமான படைப்பு பிலிப்ஸ்.
பிலிப்ஸ் பல்புகள் மற்றும் புளோரசன்ட் டியூப்களைப் பாவியுங்கள். விலைகள் ரூ. 17/75 முதல்.

இலங்கையில் ஏகப்பிரதிநிதி
ஹேலீஸ் லிமிடெட்
காட்சி அறைகள்: கொள்ளுப்பிட்டி தொலைபேசி 86958
மேலும் கிடைக்கும் இடம்: தீர்வையற்ற விற்பனைத் தொகுதி தரை மாடி, கடை இல 2.

Zenith

# யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்களுக்கு

# 'இந்தியாருடே' சஞ்சிகையே காரணம்!

## 'குமுதம்' ஆசிரியர் தலையங்கம் சாடுகிறது

"தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்குத் தெரியாத விஷயம் காற்றுவாக்கில் கூடக்கேள்விப்படாத விஷயம் 'இன்டியா ருடே' பத்திரிகைக்கு எப்படி எட்டிற்று?

"இந்தப் பத்திரிகையில் வெளியான கட்டுரையே யாழ்ப்பாண மக்களுக்கு அண்மையில் இழைக்கப்பட்ட துன்பங்களுக்கும், கொடுமைகளுக்கும் காரணம் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்"

—இப்படி 'குற்றம் சாட்டியுள்ளது. தமிழ்நாட்டில் லட்சக்கணக்கில் விற்பனையாகும் 'குமுதம்' வார இதழ்.

19-4-84 இதழில், 'இப்படிச் செய்யலாமா?' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள ஆசிரிய தலையங்கத்தில், 'இந்தியா ருடே' பத்திரிகையின் போக்கை வன்மையாகக் கண்டித்துள்ளது.

அத் தலையங்கம் முழுமையாக வருமாறு:—

இலங்கைத் தமிழர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுக்கு அண்மையில் இழைக்கப்பட்ட துன்பங்களுக்கும் இந்தியப்பத்திரிகை ஒன்றில் வெளியான ஒரு கட்டுரைக்கும் தொடர்பு இருக்கிறது என்பதை வருத்தத்துடன் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

'வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்கு அவல் கிடைத்தாற் போல' என்பார்கள். தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளுக்குப் புகலிடம் தரப்படுகிறது என்று வெகு காலமாக குற்றம் சுமத்திக்கொண்டிருந்த சிங்களவர்கள், ஆம் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்குப் புகலிடம் மட்டும் தரப்படவில்லை, பல்வேறு இடங்களில் இராணுவப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

இலங்கை மீது படை எடுக்க படையும் தயாராகிறது, என்று ஓர் இந்தியப் பத்திரிகையிலேயே கட்டுரை வெளிவந்தால் சும்மா இருப்பார்களா? கைவரிசையைக் காட்டி விட்டார்கள். பாதிக்கப்பட்டவர்கள் ஒருபாவமும் அறியாத யாழ்ப்பாண மக்கள்.

குறுகிய காலத்தில் மிக உயர்ந்த இடத்தை எட்டிப் பிடித்து விட்ட பத்திரிகை இன்டியா டுடே முக்கியமான செய்திகளைப் பொறுமையுடன் சேகரித்து செம்மையாக வடிவமைத்து கொடுக்கிறது என்ற நற்பெயர் அதற்கு உண்டு அப்படிப்பட்ட பத்திரிகையில் இப்படியொரு விஷமத்தனமான கட்டுரையா!

'தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது என்ற செய்தி ஆதாரமற்றது." என்று இந்தியத் தூதர் மறுத்தால் 'உங்கள் இந்தியப் பத்திரிகையே சொல்கிறதே!' என்று இன்டியா டுடேயைப் பிரித்துக் காட்டுகிறார் பிறேமதாசா ஏன் காட்டமாட்டார்?

ராமநாதபுரம் கடற்கரையோரமாகப் பல இடங்களில், ஓய்வுபெற்ற இந்திய ராணுவ அதிகாரிகளைக்கொண்டு விடுதலைப் புலிகளுக்கும் போர்ப் பயிற்சி தரப்படுகிறதென்றும், சென்னையில், மாமல்லபுரம் அருகே படைவீரர்கள் தயாராகிறார்கள் என்றும், ஒரு விவரமான கட்டுரை - புகைப்படங்களுடன் வெளியானால் அவருக்கு ஏன் அந்தத் துணிவு வராது?

தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்குத் தெரியாத விஷயம்— காற்று வாக்கில்கூடக் கேள்விப்படாத ஒரு விஷயம்-அந்தப் பத்திரிகைக்கு எப்படி எட்டிற்று என்று தெரியவில்லை.

இந்தியாவின் நலத்தை விரும்பாத யாரோ இலர் வேண்டுமென்றே அந்தக் கட்டுரையைச் சாமர்த்தியமாக நுழைத்துவிட்டிருப்பார்களோ என்று இலர் சந்தேகப்படுகிறார்கள்.

எது எப்படியிருப்பினும் அந்த விபரீதக் கட்டுரை, இலங்கையில் மறுபடி அக்கிரமங்கள் நடக்கவும், தமிழ் நாட்டில் ஒரு புயல் வீசவும் காரணமாக இருந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை.

# கல்லுண்டாய் வெளியில் மீண்டும் வழிப்பறி, கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

கல்லுண்டாய் றோட்டில் அராலிப் பாலத்துக்குச் சமீபமாக நேற்றுமுன்தினம் நடுப்பகல் ஒரே மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று நீளக்காற்சட்டை இளைஞர்கள் "ஹொண்டா 70" மோட்டார் சைக்கிளில் வந்தவரிடம் தமது கைவரிசையைக் காட்டிவிட்டு மறைந்துவிட்டார்கள்!

வட்டுக்கோட்டை நோக்கி இன்னொருவரை ஏற்றிக் கொண்டு, கார்த்திகேசு சுப்பிரமணியம் என்ற தொல்புரத்தைச் சேர்ந்தவர் சென்று கொண்டிருந்தபோது, எதிராக மூன்று இளைஞர்களும் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் எதிராக வந்தவர்கள் இருவரையும் மறிக்கவே நின்றனர். 'காற்றுக்காரனுது இதில் ஒருவரைக் கொண்டு வந்து அந்த இடத்தில் விட வேண்டும்" என்று கேட்கவே சகசகசத்து நின்றவரும் பின்னுக்கு இருந்தவரை இறக்கிவிட்டு இளைஞரில் ஒருவரை ஏற்றினார் சுப்பிரமணியம். பின் ஆசனத்தில் தன்னுடன் வந்தவரைச் சில நிமிடநேரம் நிற்கச் சொல்லி விட்டு, இளைஞர்களின் மோட்டார் சைக்கிளைத் தொடர்ந்து பின்னால் இவர் சென்றார். அராலிக்குச் சற்று அப்பால் நவாலிக்குச் செல்லும் குறுக்கு றோட்டில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்திக்கொண்டவர். சுப்பிரமணியம் பின்னால் இருந்த இளைஞரை இறக்கிவிட்டுத் திரும்ப நினைத்தபோது, பயமுறுத்தி இளைஞர்கள் அவரின் மோதிரம், கைக்கடிகாரமும், கைச்சங்கிலியும், ரொக்கப்பணம் ஆகியவற்றுடன் மோட்டார் சைக்கிளையும் பறித்துக்கொண்டு போய்விட்டனர் இவர் திரும்பிவந்து கொண்டிருந்தபோது, இவருக்கு இவரைக் காணாமல் மினிபஸ் ஒன்றில் ஏறி வந்து, அவரைக் கண்டதும் இறங்கினார்

யாழ். பொலிஸில் தனக்கு நேர்ந்த கசப்பான அனுபவத்தை புகார் செய்யச்சென்றபோது, அங்கு தனது மோட்டார் சைக்கிள் நிற்கக் கண்டார். அநாதரவான நிலையில் இந்த மோட்டார் சைக்கிள் இருந்ததாகவும் அங்கிருந்து யாழ். பொலிஸ் நிலையத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்டதாம்.

இந்த இளைஞர்கள் மற்றும் சில கொள்ளை, திருட்டுக்களைச் செய்திருக்கலாமென்ற சந்தேகம் பொலிசாருக்கு ஏற்பட்டுள்ளது.

பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

அண்மையில் தீவிரவாத இளைஞர்களினால் சமூகவிரோத ஒழிப்பு நடவடிக்கை தீவிரமடைந்திருந்த காலத்தில், குறைந்திருந்த வழிப்பறிகள் கொள்ளைகள் போன்றவை குறைந்திருந்த இப்பகுதியில் மீண்டும் இவ்வித செயல்கள் தலைதூக்கியுள்ளன. இப்பகுதி வீடுகளில்லாத வெறும் வெளியாக இருப்பதால் போக்குவரத்துக் குறைந்துள்ள நேரங்களில் இவ்வித வழிப்பறி போன்ற குற்றச் சம்பவங்கள் நடைபெறுகின்றன.

தூரஇடங்களில் தொழில் செய்துவிட்டு சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும், கார்களிலும்கூடச் செல்பவர்கள் நடமாட்டம் இல்லாத நேரங்களில் செல்வதற்கு அஞ்சுகின்றனர்.

## பாரின்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ணில் விழுந்து மடிந்தாலொழிய பலன் தராது ஆம்! எம் அண்ணல் இயேசு தம்மையே சோதனை மணியாக்கித் தரணியர்க்கு அளித்தனர் கடைசி இராவிலே ஏற்படுத்திய பூசைப்பலியை, சிலுவையில் இரத்தம் சிந்தி தன்னையே முழுமையாகப் பலியாக்கி கல்வாரியில் சிலுவை மீது நிறைவடையச் செய்கின்றார் இறைமகன் யேசுக்கிறிஸ்து தன் சொல்லில் மட்டும் நின்றுவிடாமல் செயலிலேயும் இறங்கி எமக்கு வழிகாக, ஒழியாகத் திகழ்ந்தார். எம் ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்விலும் வரும் துன்பங்கள், சிக்கல்கள் காலவேறுபாட்டால், கடமைவேறுபாட்டால், பல சூழ்நிலைகளால் ஏற்படும்போது கல்வாரி மலை நோக்கி சமுமரத்தைச் சுமந்து சென்ற இயேசுவை எம் ஞானக்கண்களின் முன் நிறுத்தி சிந்திப்போம். மாவீரன் இயேசுவைப்போல் துன்பம் எனும் பாரச்சிலுவையை சுமக்க, அவருடனேயே பின் செல்ல, நான், நீ, யாபேருமே தயாராக உள்ளோமா? எம் மனச்சாட்சியை சற்றுத் தட்டி சிந்தனை செய்வோம். எம் மனதைத் தளரவிடாமல் மீட்பின் வழியைக் காண்பித்த மகத்துவமும், மகிமையும் கொண்ட இயேசுவின் பாதையைக் கண்ணும் அவரிலேயே தம் பிக்கை கொண்டு புதுவாழ்வு பெற்றுத் திகழ்வோம்.

இறைமகன் கிறிஸ்து இறுதியில் சிலுவையிலே தொங்கிய வேளையிலும் தன்னை வஞ்சித்து, தன்னை சித்திரவதைக்குள்ளாக்கிய கதிகெட்ட துஷ்டர்களை மன்னித்து அவர்களுக்காகப் பிதாவிடம் வேண்டுகின்றார்.

அளப்பரிய அன்பின் மிகுதியாலேயே அன்பின் வடிவமான இயேசு தம்மை எமக்கு உணவாகத் தந்தார். ஆகவே நாம் அனைவரும் எம் பாவத்தளைகளை விடுவித்து இயேசுவின் ஒளியில், அவரின் வழியில் ஒருவருடன் இணைவோமாக. சிறப்பாக இப்புனித நாளிலே எம் ஐம்புலன்களையும் அடக்கி, ஆசைகளை ஒடுக்கி, இயேசுவின் சிலுவை வழியே சென்று அவரின் திருப்பாடுகளை சற்று முன்னோக்கிப் பார்த்து சிந்தித்து எம்மையே பலியாக்கி அவருடன் ஒப்புரவாகுவோமாக.


## யாழ். மக்களுக்கு ஓர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா? உங்கள் பிரயாணச்சிட்டுக்களை
இன்றே யாழ் நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்.

பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி

செல்வதற்கான சகல ஏற்பாடுகள், மற்றும் பயணச்சிட்டுக்களை
மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PTE.) LTD.

STAGE II, MODEL MARKET No. 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone No: 22040 22065.

மிகக் குறைந்த கட்டணத்தில் சிறந்த, தெளிவான
போட்டோ பிரதிகளை எடுக்கவேண்டுமா?

நகல் வடிவங்களை:-
1. அதே அளவில் (Same size) அல்லது 2. பெரிய அளவில் (Enlarged size) அல்லது
3. சிறிய அளவில் (Smaller size)

Minolta Machine இல் பெற்றுக்கொள்ள எங்கள் சேவையை உடனே நாடுங்கள்.



RAPID RESULTS INSTITUTE & ISLAND INSTITUTE

RRI ABSOLUTE CONFIDENCE

## முக்கிய அறிவித்தல்

எமது வகுப்புக்கள் யாவும் வழமைபோல்
நாளை சனிக்கிழமை (21-04-84)
காலை 8 மணி தொடக்கம் நடைபெறும்.

58, Stanley Road, Jaffna.

1983

# யாழ்ப்பாண நகரம்

## 3 மணிக்கே அடங்குகிறது

(கா. சோமநாதன்)

யாழ்ப்பாண நகரில் போக்குவரத்து, மக்கள் நடமாட்டம் குறைந்து பிற்பகல் 3 மணியுடன் நகரம் அடங்கிவிடுகிறது.

கடந்த 5 தினங்களாக, காலையில் திறக்கப்பட்டிருக்கும் கடைகள் பிற்பகல் 3 மணிக்கு முன்னர் மூடப்பட்டுவிடுகிறது.

மக்கள் நடமாட்டம், நண்பகல் முதல், குறைந்து 3 மணிக்கு முற்றாக அமைதி ஏற்பட்டுவிடுகிறது.

### பிரயாணிகள் குறைவு

பஸ் போக்குவரத்து பிற்பகலில் நடைபெற்று வரும்போதிலும், பிரயாணிகள் தொகை மிகமிக குறைவாகவே இருக்கிறது.

காலையில் கூட பஸ்கள், மினி பஸ்களில் பிரயாணிகள் தொகை குறைவாகவேகாணப்படுகிறது.

நகரிலுள்ள தனியார் கல்லூரிகள், ரியூட்டரிகள் இன்னும் திறக்கப்படவில்லை. ஆனால், நகரின் சுற்றுப்புறங்களிலுள்ள குடிசனம் மிகுந்த பகுதிகளில், ரியூசன் வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

படமாளிகைகள் சில தியேட்டர்களில் மட்டும் பகல் காட்சிகள் நடைபெற்ற போதிலும், மிகக்குறைவாகவே மக்கள் செல்கின்றனர்.

### பாதுகாப்புத்தேடி..

யாழ் நகரிலுள்ள பல கடைகளில், பொருட்கள் குறைக்கப்பட்டுள்ளது முக்கியமாக பெறுமதி மிக்க சாமான்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

நவீன மார்க்கட்டிலுள்ள சில ஜவுளி நிலையங்கள் வெறிச்சோடிக்கிடக்கின்றன. அங்குள்ள ஜவுளிகள் யாவும் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

நவீன மார்க்கட் கிருந்தைகளுக்கு இரும்பு பாதுகாப்புக் கதவுகள் போடும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகிறது. நவீன மார்க்கட் பொதுவான வாசல்களில், யாழ். மாநகரசபையே பொறுப்பேற்று இரும்புக் கதவுகளை அமைத்து வருகின்றன ஆனால் ஒரு சில வர்த்தகர்கள் மட்டுமே தங்கள் கடைவாசலுக்கு பாதுகாப்பு இரும்பு கதவுகள் போட்டுள்ளனர். மற்றவர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

### 25ம் திகதிக்கு முன்னர்

இம்மாதம் 25ம் தேதிக்கு முன்னர் பாதுகாப்புக் கதவுகள் போடப்பட்டுவிடுமென்றும், ஏற்கனவே இதற்கான 'ஓடர்'கள் கொடுக்கப்பட்டுவிட்டதாகவும் வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

நகரப்பகுதியில் இருந்த சில தனிப்பட்ட வைத்திய நிலையங்கள், வேறு பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. இதேபோன்று சில வர்த்தக நிலையங்களும் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

### ரூ 7 000 பொருட்கள் கொள்ளை

கடந்த 11ம் தேதி யாழ். நகரில் உள்ள ஒரு வர்த்தக நிலையத்தில், காலை 11 மணிக்கு துப்பாக்கி சூட்டின் வேகத்தினால் மக்கள் பயந்தோடிய நேரத்தில் சுமார் ஏழாயிரம் ரூபா பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாம்.

இச்சம்பவம் பற்றி பொலிஸில் புகார் செய்யவில்லையென்றும், புகார் செய்தால் மேலும் பாதிக்கப்படலாம் என்று அஞ்சுவதாகவும் அந்த வர்த்தக நிலைய உரிமையாளர் தெரிவித்தார்.

பயத்தின் காரணமாக அன்றுகாலை கடையை பூட்டிவிட்டு சென்றதாகவும் காலை 10 மணிக்கு கடை உடைக்கப்பட்டு சிகரெட் பக்கட், சாக்லெட் வகைகள், பால்மா வகைகள், சோடாக்கள், 3,000 ரூபா ரொக்கப்பணம் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கடையில் கொள்ளையடித்தவர்கள் காலை 10 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை கடைக்குள்ளே இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மற்றொரு கடையில் ஊரடங்கு அமுலில் இருந்த நேரத்தில் கொள்ளை நடந்துள்ளதாக கூறப்படுகிறது.

யாழ். நகரிலுள்ள சில வீடுகளின் முன்பக்க மதில் உயரமாக கட்டப்பட்டு வருகிறது. சில வீடுகளில் 9 அடி மதில்கள் கட்டப்பட்டு வருகிறது. சில தனியார் கடைகளுக்கு இரும்பு கதவுகள் போடப்பட்டு வருகிறது (க)

## கொண்டாட்டம் இல்லை

(மட்டக்களப்பு)

யாழ்ப்பாணத்தில் சென்ற வாரம் நிகழ்ந்த துயரமிக்க சம்பவங்கள் காரணமாக இம்முறை மட்டக்களப்பில் தமிழ் புதுவருடப் பிறப்பு கொண்டாடப்படவில்லை

வழக்கமாக வெகு உற்சாகத்துடன் கொண்டாடப்படும் புதுவருடப் பிறப்புக் கொண்டாட்டம் இம்முறை சோபை இழந்து சோகமயமாகக் காட்சியளித்தது.

வெலிங்டன் மகாவிஷ்ணு
மறு அறிவித்தல் வரை
2-30 காட்சி மட்டும்
கமலஹாசன்-லக்ஷ்மி
சகலகலா வல்லவன்

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 2 காட்சிகள்
ரவிச்சந்திரன்-விஜயா
சோ-நாகேஷ் நடித்த
நினைவில் நின்றவள்
(முழுநீள ஹாஸ்யப்படம்)

ராணி (யாழ். நகர்)
சக்கரவர்த்தி
திருமகள்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
சிவாஜி — பாரதி
தங்கச் சுரங்கம்
(புதியபிரதி)

மனோகரா (யாழ். நகர்)
தினசரி 2 காட்சிகள்
கமலஹாசன் (இருவேடம்)
ஸ்ரீதேவி
கல்யாணராமன்
(புதிய பிரதி கலர்)

ராஜா (யாழ் நகர்)
சிவாஜி-பத்மினி-சந்திரபாபு
செந்தாமரை
21-4-84 முதல்
பெண்ணே நீ வாழ்க

ஹரன் (யாழ். நகர்)
ஜெய்சங்கர்-மனோரமா
தேங்காய் சீனிவாசன்
காதலிக்க வாங்க
(புதிய பிரதி)
வயிறு குலுங்கவைக்கும்
நகைச்சுவை சண்டைக்
காட்சிகள் நிறைந்தது

FROM TODAY
நீகல் (யாழ். நகர்
காலை 10-30, 2-00 மணிக்
காட்சிகள் மட்டும்.
TEN. SEX
(Color)
(Strictly for Adults only)

லிடோ (யாழ் நகர்)
ரவீந்தர் - ரூபா
ஒரு தலை ராகம்

வெலிங்டன்
Roger Moore in
ESCAPE TO ATHENA
(Action packed thriller)
யாழ்நகரில் கடைசித் தடவையாக நான்கு தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்.

## நஞ்சருந்தி தற்கொலை

(மானிப்பாய்)

தமது ஓய்வூதியப்பணத்தில் மது அருந்தி மகிழ்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் வீட்டுக் கஷ்டம் ஏற்பட்டு பிரச்சினைகள் தலைதூக்கவே நஞ்சருந்தி மரணமானார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த சாமுவேல் சுப்பையா (58 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு நா. தம்பிராசா மேற்படி மரண குறித்து விசாரணை நடத்தினார்.

மது அருந்தும் பழக்கமுடையவரானவர் தமது ஓய்வூதியப்பணம் முழுவதையும் மது அருந்துவதிலேயே முடித்துவிடுவதாகவும், வீட்டில் குடும்பச் செலவுக்குப்பணம் கொடுப்பதில்லையெனவும், வீட்டில் பணக்கஷ்டம் ஏற்பட்டு பிரச்சினைகள் தோன்றும்போது 'மருந்து குடித்துவிடுவேன்' என அவர் கூறிவந்ததாகவும், சம்பவதினமும் இவ்வாறு பிரச்சினை எழவே தாம் கூறி வந்ததை அவர் செய்து முடித்ததாகவும் விசாரணையில் தெரிய வந்தது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கினார். (லெ)

## பாக்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் இவ்விமானங்களில் பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு வழங்கவென ஆயுதங்கள் கொண்டுவரப் பட்டிருக்கலாமென கருதுகின்றனர். பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தானிலிருந்து ஆயுதங்கள் வழங்கப்பட்டு வருகின்றனவென்று இந்தியா கூறிவருகிறது.

இதேவேளை பஞ்சாப்பில் தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் பொது இடங்களில் தரித்து நிற்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (கி)

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு சிவலைப்பிட்டி கனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு ஏ சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் நடப்பு வருடத்துக்கான நிருவாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: கா.சி. அமிர்தலிங்கம் செயலாளர்: இ. சந்திரபாலன் பொருளாளர்: சி. கனகரத்தினராஜா, விளையாட்டுத்தலைவர்: க. சோமநாதன், அன்னதானசபைத் தலைவர்; க. சிவலிங்கம், உபதலைவர்: க. கண்ணதாசன், உபசெயலாளர்: பா. நகுலராஜன், விளையாட்டு உபதலைவர்: க. கருணாநிதி; நிருவாக சபை உறுப்பினர்களாக ஏழு பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (சு)

0 0 0

(மன்னார்)

தலைமன்னார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அபிவிருத்தி சபைக் கூட்டம் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு குலாஸ் (அதிபர்), துணைத் தலைவர்: ஜனாப் ஜெவாபர் சாதிக், செயலாளர்: திரு எல் ஏ ஜோசப், துணைச் செயலாளர் திரு எம். எஸ். அசிரபட்டு பொருளாளர்: திரு சுதாகரன்.

16 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# யாழ். ஆஸ்பத்திரியில் வெறிச்சுக்கிடக்கும் வார்டுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியிலுள்ள துப்பாக்கிச்சூடு போன்ற காயங்களுடன் அனுமதிக்கப்படும் ஆண்களுக்கான வார்டுகளில் அதிகமான படுக்கைக் கட்டில்கள் வெற்றிடமாகக் காணப்படுகின்றன.

ஆயுதப்படையினர் ஆஸ்பத்திரிக்குள்ளும் அதிகமாக நடமாடுவதால், பீதியடைந்த, காயங்கள் ஏற்பட்ட நோயாளர்கள் தனியார் வைத்திய சாலைகளிலும், வேறு அரச ஆஸ்பத்திரிகளிலும் தங்கிச் சிகிச்சை பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

கடந்த 9-ம் திகதி தொடக்கம் யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது கொலையுண்டவர்களைத் தவிர நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் குறிப்பிட்ட வார்டுகளில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, மீண்டும் வார்டுகளை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதாம். இதனால் பீதியடைந்த காயம்பட்ட நோயாளர்களில் பலர் வார்டுகளிலிருந்து வெளியேறிவிட்டனராம்!

இப்பொழுது குறிப்பிட்ட வார்டுகளில் அதிகமான படுக்கைக்கட்டில்கள் வெறுமனே காட்சியளிக்கின்றன. (மா)

## கடன் தொல்லையால் தற்கொலை

(மன்னார்)

ஆயிரம் ரூபா கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாத இரண்டு பிள்ளைகளின் தந்தை கிருமி நாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

மன்னார் - எளுவங்குளத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இராமசாமி விஜயன் என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

இம்மரணம் தொடர்பாக நடைபெற்ற விசாரணையின் போது கரணமானவரின் தாய் சாட்சியமளித்தார்.

மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி ஜனாப் எஸ். அமைது லெப்பை தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## துப்பாக்கிச் சூட்டினால் வலதுகால் துண்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதி சோனகதெருவில் வசிக்கும் மீராசாகிப் சித்திக் (25 வயது) என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதால் அவரது வலதுகால் துண்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9-ம் திகதி பிற்பகல் 2 மணியளவில் யாழ் ஆஸ்பத்திரி வாசலில் வைத்து இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதாகவும், வலது காலில் காயம் ஏற்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சையின் பின்னர் அக்கால் அகற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா

## சிரமதானம்

(மன்னார்)

அண்மையில் பெய்த பெருமழை பெரு வெள்ளம் என்பவற்றினால் சேதத்துக்குள்ளான மன்னார் மாவட்டத்தைச்சேர்ந்த நாயாறு வீதி சிரமதானம் மூலம் புனரமைக்கப்பட்டது.

அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு வி. முருகையா தலைமையில் நடைபெற்ற இச் சிரமதானப்பணியில் பெருந்தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இச் சிரமதானப் பணிக்கு செலவிட வென அடம்பன் கிராமோதய சபை ஆயிரம் ரூபா நிதியை வழங்கியிருந்தது.

இச் சிரமதானப்பணி மூலம் சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

# கூட்டணி உண்ணாவிரதத்தில் மக்களும் பங்குபற்றுவர்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நடாத்தவிருக்கும் உண்ணாவிரதத்தில் கூட்டணி முன்னாள் எம். பி க்களுடன், கூட்டணி முன்னாள் பாலட்ட சபை. யாழ் மாநகர சபை உறுப்பினர்களும், பொதுமக்களும் பங்குபற்றுவார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி நிர்வாகச் செயலாளர் திரு எம். ஆலாலசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உண்ணாவிரதம் நடைபெறும் தேதியும், இடமும் பற்றி சனிக்கிழமை நடைபெறவிருக்கும் கூட்டத்தில் முடிவுசெய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஈ)

## பயங்கரவாதம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யிட்டுள்ளார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற தோட்டதுரைமார் கூட்டத்தில் உரைநிகழ்த்துகையிலேயே ஜனாதிபதி மேற்படிகருத்தை தெரிவித்தார்.

"கடந்தவருட ஜூலை வன்செயல், தமது வாழ்க்கையில் ஏற்பட்ட கறைபடிந்த துயரச் சம்பவமாகும். இம்மாதிரியான சம்பவம் இனிமேல் தலைதூக்க நாம் இடமளிக்கக் கூடாது" என்று கூறிய ஜனாதிபதி;

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் பயங்கரவாதத்தை ஒரு வாரத்துக்குள் ஒழித்துவிடுவதாக கூறியிருக்கின்றார். பொறுப்பற்றமுறையில் அவர் இப்படி பேசக்கூடாது வேண்டுமானால் இந்தியா, அவர்லாந்து நாடுகளுக்கு அவர் போகட்டும் இங்கு திருமதி சிறிமாவை அனுப்பிவைக்க நான் தயாராக இருக்கின்றேன்" என்று தெரிவித்தார்.

## தென் இந்தியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தவர்கள்; இலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் வாழும் தமிழரைப் பெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது.

"இந்திய அரசின் போக்கு மிகவும் நிதானமாகவும், பொறுப்புள்ளதாகவும் இருக்கிறது. இலங்கை மீது இந்தியா அனுதாபம் கொண்டுள்ளது. ஆனால் சில மாநில அரசுகளின் போக்குத்தான் வேறுவிதமாக இருக்கிறது.

"பயங்கரவாதத்தை சாத்வீக வழியில் அல்லது கடுமையான நடவடிக்கைகள் மூலம் முறியடிக்க அரசு முன்வந்திருக்கிறது இது இந்தியாவின் பிரச்சினை அல்ல. எமது சொந்தப்பிரச்சினை. இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்த்துவைக்கவே அரசாங்கம் விரும்புகிறது.

'சர்வகட்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டது குறித்து இந்தியா கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறது நாம் புதிய யுபதிகளை கேட்டுக்கொண்டு வருகின்றோம். பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் புதிய அணுகுமுறைகளையும் இலங்கை அரசு வரவேற்கிறது! இந்த நிலையில் அரசு இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க விரும்பவில்லை என்று எவரும் எதிர்பார்க்க கூடாது. சர்வகட்சி மாநாட்டில் மேற்கொள்ளப்படும் முடிவுகள் சட்டவடிவம் கொண்டு செயல்படுத்தப்படும் என்பதை நான் இந்தியத்தலைவர்களிடம் விரிவாகவிளக்கிக் கூறியுள்ளேன்.

"நாம் தமிழ்மக்களுக்கு எதிராகச் செயல்படவில்லை பயங்கரவாதிகளுக்கு எதிராகவே செயல்படுகின்றோம். பயங்கரவாதிகள் எமது எதிரிகள் அல்ல அவர்கள் எமது விரோதிகள்".

## டுப்பிட்டியில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படையினர் வீடுகளில்சோதனையிட்டனர்.

வீதிவழியாகச் சென்ற சகல வாகனங்களும் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டன.

வடபகுதியில் மற்றும் பிரதேசங்களிலும், இப்படியான சோதனை திடீரென நடைபெறுமெனக் கூறப்படுகிறது

இச்சோதனையின் போது சிலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும், மற்றும் சிலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது

இச்சோதனையின்போது தேசிய அடையாள அட்டை கேட்கப்படுவதாகவும், வீடுகளில், தடைசெய்யப்பட்ட இயக்கங்களின், பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள், முத்திரைகள், படங்கள் இருந்தாலும், அதுபற்றி தீவிரமாக விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது,

வீடுகளில் சோதனை நடைபெறும்போது அங்கு இல்லாதவர்கள் பற்றியும், கேள்வி எழுப்பப்பட்டுவருவதாகவும், வீட்டிலுள்ளோர் விபரங்கள் கேட்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (ஈ)

## தகவல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லலித் அத்துலத் முதலி தமது அமைச்சு அதிகாரிகளை பணித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சு யாழ்ப்பாணப் பகுதியில் கடந்தவாரம் ஏற்பட்ட சேதங்கள் பற்றி உத்தியோகபூர்வமாக பல தகவல்களை வெளியிட்டுள்ளது. அவர்களுடன் யாழ்ப்பாணம் அரசாங்க அதிகாரிகள் 'ராய்டரு'க்கு வழங்கிய தகவல்கள் முரண்படுவதாலேயே எவ்வாறு அவர்கள் தவறான தகவல்களை வழங்கியிருக்க முடியுமென தேசிய பாதுகாப்பு அமைச்சு பரிசீலனை செய்து வருகின்றது. (இ)

## அடுத்தமாதம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 16ம் திகதி தொடக்கம் 22ம் திகதி வரை மூடப்பட்டிருந்த யாழ் பல்கலைக்கழகம் விரிவுரைகளுக்காக மீண்டும் இம்மாதம் 23ம் திகதி திறக்கப்படுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்த முடிவு மாற்றப்பட்டு பல்கலைக்கழக விரிவுரைகளுக்காக அடுத்த மாதம் 7ம் திகதிதான் திறக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சூ)

## இந்திரா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விளக்கியிருப்பதாகவும், பிரதமர் திருமதி இந்திரா காந்தி மிகவும் உன்னிப்பாகக் கேட்டறிந்தார் என்றும் கூறினார்

இவ்விஷயத்தில் முடிந்த அனைத்தையும் மத்திய அரசு செய்யும் என்ற தமக்குப் பிரதமர் உறுதி அளித்ததாகவும் தமிழக முதல்வர் நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்னையில் தமிழக மக்களின் உணர்வுகளைத் தாம் முழுமையாகப் புரிந்து, ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தம்மிடம் கூறியிருந்ததாகவும் திரு எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

## ஒரு பிக்குவின்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பஸ் நிலையத்தினூடாக நான் சென்றுகொண்டிருந்த போதும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் மிக அருகில் காதைத் துளைத்துக்கொண்டிருந்தன முனீஸ்வரன் வீதியை நோக்கி நான் சென்றபொழுது ஹட்டன் நாஷனல் வங்கிக்கு முன்பாகவுள்ள சோமசுந்தரப் புலவரின் சிலையின் அடியில் ஜப்பானிய பௌத்தபிக்கு ஒருவர் கிழக்கே பார்த்தபடி "ஓம், ஓம்" என்ற அமைதியாக ஒலி எழுப்பியபடி தனது றபானை அடித்துக்கொண்டு பிரார்த்தனையில் அமர்ந்திருந்தார். ஜனசஞ்சாரமற்ற அந்த இடத்தில் அந்த நேரத்தில் துப்பாக்கிவேட்டுச் சத்தங்களுக்கு மத்தியில். சிறிது தூரத்தே புகைமண்டலம் மேலெழும்பிக்கொண்டிருக்க அந்தப் பிக்கு அமைதியாகப் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தது என்னைப் புல்லரிக்கச் செய்தது! அவருக்கும் மரியாதை செலுத்திவிட்டுத் தொடர்ந்து முனீஸ்வரன் வீதி வழியாகப் பொலிஸ் நிலையப் பக்கம் சென்றேன் நான் தேடிச் சென்ற இடத்தில் எனது மகனைக் கண்டேன் நிலைமை சீராகும்வரை அங்கேயே அவனை நிற்கும்படி கேட்டுக்கொண்டார்கள். என்னையும் திரும்பிப் போகவேண்டாமெனத் தடுத்தார்கள். அப்பொழுது விளையாட்டரங்கிலிருந்தும் வேட்டுச் சத்தங்கள் ஒலித்தன. நான் உடன் திரும்பி அதே வழியால் வந்துகொண்டிருந்தேன். அச்சந்தியால் திறந்த வெளியரங்குச் செடிகளுக்கிடையே நீண்ட நேரம் மறைந்திருந்த மாநகர சபை ஊழியர் ஒருவர் என்னை வீதியில் கண்டதும் "துணிவு பெற்று" என்னுடன் சேர்ந்து கொண்டார். இருவரும் முனீஸ்வரன் வீதியால் வந்ததைக் கதவு இடுக்கின் மூலம் கவனித்துக் கொண்டிருந்த இரண்டொருவர் வீதிக்கு வந்தனர். அதே இடத்தில் அதே ஜப்பான் பௌத்த பிக்கு தொடர்ந்தும் ஓங்கார ஒலியெழுப்பி றபானில் அடித்துக்கொண்டு அமைதியாக அமைதிவேண்டிப் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தார்.

ஹட்டன் நேஷனல் வங்கியின் பின்புறக்கதவில் பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தர் இருவர் ஒரு போத்தலில் தண்ணீர் நிரப்பி வைத்து என்னைக் கண்டதும் "அண்ணை இந்தத்தண்ணீரை அந்தசாமியாரிடம் கொடுங்கோ அவரால் தான் நாங்கள் தப்பியிருக்கிறோம், இந்தப்பகுதியும் தப்பியிருக்கிறது என்று சொல்லித் தண்ணீர்ப்போத்தலைத் தந்தார்கள். நான் அதை அந்த பிக்குவிடம் கொண்டு சென்றேன். அவர் தலையை அசைத்து வேண்டாம் என்று மறுத்து விட்டார் நல்ல வெய்யிலில் அவருடைய மஞ்சள் உடல் மேலும் பொன்னிறமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது வியர்வை முத்துமுத்தாகத் தலையிலிருந்தும் முகத்திலிருந்தும் கொட்டிக்கொண்டிருந்தது. மற்றும் இலரும் அங்குவந்து அவரைப்பார்த்துக் கொண்டு நின்றனர் அவரோ எதைப்பற்றியும் கவலைப்படவில்லை "ஓம் ஓம்" என்னும் ஓங்கார ஒலியுடன் றபான் அடித்தும் பிரார்த்தனை செய்துகொண்டேயிருந்தார். பதினைந்து அடி தூரத்திலிருந்த பாதுகாவல் உத்தியோகத்தர்கள் தாங்களே நேரில் கொண்டுவந்து தண்ணீர் கொடுக்க முடியாது அச்சமடைந்திருந்தனரென்றால் அதற்குமுன் அந்தப்பகுதி என்ன நிலையில் இருந்திருக்கும் ?

ஒரு ஜப்பானிய பிக்குவின் அமைதியான பிரார்த்தனையும் ஓங்கார ஒலியும் அந்தப் பகுதியையும் அப் பகுதியிலிருந்தவர்களையும் காப்பாற்றியதென்றால் பிரார்த்தனையின் மகிமையை சொல்லவும் வேண்டுமா. பிரார்த்தனையையே நம்பியிருந்த காந்திமகான் தமது இலட்சியத்தில் வெற்றியீட்டவில்லையா? சோதனை மிகுந்த இந்நேரத்தில் பிரார்த்தனைதான் நமக்குரிய நல்வழி.

மு. கோபாலரத்தினம்,
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

# இப்படியும் நடக்கிறது

"பொதுஜனத் தொடர்பு சாதனங்களில், நேற்று வரை பத்திரிகைகளை மிஞ்சிவிட்ட வானொலி! இன்று தொலைக்காட்சி முன்பாக தலை குனியும் அளவுக்கு, செய்திகளின் வேகம் மின்னலையும் வென்றுவிட்டது......"

இப்படியாக, தனது புதிரின் ஆரம்பப் பகுதியைத் தொடக்கும் ஸ்ரீமான் பொதுஜனம்,

'கயிறு திரித்தல்' என்றால் என்ன என்று வினவுகின்றார்.

"...... அதாவது சிறு துரும்பும் இல்லாமல் வெறும் மண்ணை மட்டும் கொண்டு எப்படி கயிறு திரிக்கலாம்?" என்று ஸ்ரீமான் பொதுஜனம் புதிர் போடுகின்றார். உங்களால் முடியுமா?

'சற்றலைட்' டின் துணைகொண்டு இயங்கும் எந்தச் சேவையையும் தவிர்த்து நீங்கள் இன்றுடம் கேட்கும் வானொலி, பார்க்கும் தொலைக் காட்சியை மேற்படி புதிரை அவிழ்க்க ஓரளவு பயன்படுத்தலாம் என்றும் ஸ்ரீமான் பொதுஜனம் 'அடிக் குறிப்பு' எழுதியுள்ளார்.

முடியுமான வரை முயற்சித்துப் பாருங்கள்.

'ஊடுருவி'

# தந்தைகண்டித்தார் மகன் தற்கொலை

[மாவிட்டபுரம்]

நீர் பாய்ச்சுவதற்கு உதவி செய்யவில்லையேயென்று மகனை தந்தை கண்டித்ததை யடுத்து மனமுடைந்த மகன் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்

பலாலியைச் சேர்ந்த வைரமுத்து வசந்தகுமார் (18 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா இம்மரணம் குறித்து விசாரணை நடத்தினார்.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த எஸ். தியாகராஜா சாட்சிகளை ஆஜர் செய்தார்.

## இலங்கை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலதாமதமற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மேற்படி அரசியல் கட்சித் தலைவர்கள் யோசனை வெளியிட்டுள்ளனர்.

## ஊரடங்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிறது பொலிசார் இக்குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து வருகின்றனர், (ஈ)

## ராய்ட்டர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமக்கு வேண்டிய பொருட்களை வாங்க நகருக்குவரும் போதும் பெரிய நீண்ட அணியுடன் வருகிறார்கள் என்றும் கூறியுள்ளார்.

கெரில்லாத் தாக்குதல்களை நடத்திவோர் மறைந்ததும் பொதுமக்களே அத்தாக்குதல் நடந்த இடத்தில் எஞ்சி நிற்கின்றனர் எனவே ராணுவம் அவர்களையே பயங்கரவாதிகள் என்று கருதித் தாக்குகின்றது எனவும் அவர் கூறியுள்ளார். (கி)

## நேற்றும் ஊரடங்கு

(கொழும்பு)

பத்தாவது நாளாக நேற்றும் யாழ். மாநகரசபைஎல்லைக்குள் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்தது

நேற்று இரவு 8மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று அதிகாலை 4மணிக்குத் தளர்த்தப்படுமென்று ராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது. [சூ]

## கருத்தரங்கு

(மன்னார்)

எருக்கலம்பிட்டி மாதர்பணியகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கான தேனிவளர்ப்புத் தொடர்பான 3 நாள் பயிற்சி வகுப்பு எருக்கலம்பிட்டி அரசினர் முஸ்லீம் மகளிர் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்பயிற்சி வகுப்பில் எருக்கலம்பிட்டி மகளிர் பணியகத்தைச் சேர்ந்த 25 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அந்தோனியா செபஸ்தியாம்பிள்ளை

திருமதி அந்தோனியா செபஸ்தியாம்பிள்ளை காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற சாமிநாதன் செபஸ்தியாம்பிள்ளையின் மனைவியும், அருட்திரு விஜயரத்னம் அ. ம. தி, அருட்செல்வன் ஆன் ஜெறாலுன் திரு நவரத்னம் ஆகியோரின் தாயுமாவார் அன்னாரின் இறுதிச்சடங்குகள் 20ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வல்வெட்டித்துறையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். 1919

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegrm: Eelanadu, Telephone: 22389 — 24126.